பெற்று இருக்கிறது. இப்படிப் பல்வேறு பிரச்சினைகளிலே முன்னணியிலே இருக்கின்ற இந்த மாநிலம் மேலும் மேலும் சிறப்புற்று வளர்வதற்கு வழிவகைகள் செய்கின்ற வகையிலேதான் இப்படிப்பட்ட தன்மைகளெல்லாம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இவற்றுக்கு நல்ல ஆதரவும், ஒத்துழைப்பும் தொடர்ந்து தர வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்களையும் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொண்டு இந்தத் துணை மானியக் கோரிக்கைகளை ஆதரிக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது.

6. அறிவிப்புகள்--தொடர்ச்சி.

(ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1994-95, முன் மொழிதல் (ஆ.செ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *1994–95*ஆம் ஆண்டின் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகளைப் பேரவையில் முன் மொழிவது குறித்து ஆளுநரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றுள்ளது.

Message

"In pursuance of Article 205 read with Clause 3 of Article 203 of the Constitution of India, I, M. Channa Reddy, Governor of Tamil Nadu, hereby give my recommendation for moving in the Tamil Nadu Legislative Assembly, the demands for further grants for the year 1994-95."

7. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1994-95-பொது விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1994–95*ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*1994–95* ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய *3–11–1994* தேதியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் *1994–95* ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.